

பொய்யாமொழி

ஆசிரியர்—ம. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981 கார்த்திகை 28 (13—12—50) புதன்கிழமை. { மணி 16

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
...RAS

ஏனோ..?

(புலவர். ப. அரங்கசாமி.)

கார்முகிலைக் கண்டுமயில் களிகூத் தாடும்
கதிரோனை தாமரைக்கண் டலர்ந்தே நிற்கும்
பேரிருளைப் போக்கவரும் நிலவைக் கண்டு
பெருமையொடு அல்லியுமே இன்பங் கொள்ளும்
யாரவற்றின் செயலைக்கண் டதிசயிப் பார்!
யாருமில்லை இவ்வுலகில், ஆனால் அந்தக்
காரிகைதன் காதலன்தன் முகத்தைக் கண்டுக்
களிப்புற்றால் உலகமதி சயிப்ப தேனோ?

அன்றிலெனும் பறவையினம் அன்பாய் வாழ்ந்து
அவற்றிலொன்று பிரிந்திடினும் அன்றே மாளும்
அன்றலர்ந்த மல்லிகையும் அழுகிப் போனால்
அதனுடைய மணம்பிரிந்து அற்றே போகும்
இன்றவற்றின் செயல்கண்டு வியப்பா ருண்டோ!
எவருமில்லை, மற்றதுதான் அயற்கை என்பார்
இன்றவன்தன் கனிமொழியாள் பிரிவை எண்ணி
ஏங்கிட்டு எழில்குறைந்தால் வியப்ப தேனோ?

நன்றான குழலோசை நாதங் கேட்டு
நச்சரவும் மெய்மறந்து இன்பங் கொள்ளும்
வென்றிமிகு யானையும்நல் வீணை கேட்டு
இன்றெவரும் அவற்றினது செயலைக் கண்டு
ஏதேனும் வியப்படைந்த துண்டோ! ஆனால்
இன்றவன்தன் உயிரனையாள் குரலைக் கேட்டு
இன்பது கொண்டிட்டால் வியப்ப தேனோ?

வார இதழ் விலை அணா 1

— கற்பனை. —

காதல் மணம்.

—N சேதுராமுலு—

மாலை நேரம், மணி ஐந்திருக்கலாம். வீட்டுத்திண்ணையில் சாய்வு நாற்காலியில் (Easy Chair) சாய்ந்து கொண்டு கருணாநிதி எழுதிய 'தூக்குமேடை'யைப் படித்து முடித்தேன் மூன்றுமுறை. என் சிந்தனைக் கடலை கலக்கிக் கொண்டிருந்தன எண்ண அலைகள். என் சிந்தனை கீழே உள்ளதுதான்:

'தூக்குமேடை' மூன்று தரம் மக்கள் மன்றத்திற்கு வருகிறது. சட்டம் மக்களின் முடிவை ஒத்துக்கொள்ளவில்லை. முதலிலே வேலைக்காரமுனியன் தூக்குமேடைக்கு அழைக்கப்படுகிறான். கட்டிலிலே படுத்த காரணத்திற்காகத் தூக்குமேடை. இரண்டாவதாக பூசாரி வருகிறான் ஏன்? பூவைத் தொடுத்து பூஜைசெய்வது பூசாரி கடமை. அதை மறந்து மாரியாத்தா கோயிலுக்கு வரும் மடந்தையர்களை—மங்கைகளை பதம்பார்க்கிறான். டபுள் எம் ஏ. (மாமா) வேலையும் பார்க்கிறான் அபிநய சுந்தரனுக்காக. இதைப் போன்ற பூசாரிகளின் அயோக்யத்தனத்தை எடுத்துக்கூறி அவனைக் குத்திக் கொல்கிறான் ஒரு வீரன். கடைசியாக பாண்டியன் வருகிறான் நிரபராதி என்று மக்கள் மன்றம் தீர்ப்பு கூறும். ஆனால் சட்டம் ஒரு இருட்டறை. வக்கீலின் வாதம் விளக்கு என்று ஒரு அறிஞர் கூறுவது போல நீதியை கொலை செய்விக்கிறது.

"பட்டப்பகலிலே பகட்டாக அட்டகாசம் செய்யும் பதினாயிரக்கணக்கான நய சுந்தரங்களின் ஆணவத்தை அடியோடழிக்க ஒரு வேணி வருகிறாள். அவ் வேணிக்கு ஆயிரக்கணக்கான அர்த்தநாரிகளின் அட்டகாசத்தை அழிக்க நேரமில்லை. பாண்டியனும் வேணியும் காதல் வளங்கொண்டனர். கொலை களத்தில். பிரிந்தனர். மாண்டனர்." என் (மேற்கண்ட) சிந்தனை அலைக்கடலை கலைக்க 'ஸார்' என்ற இனிமைக் குரல் கேட்டது மௌனம் கலைந்தது. நிமிர்ந்து பார்த்தேன். மதியையொத்தமங்கை பாலுடன் போட்டிபோடும் பற்கள், கோவைப்பழ நிறத்தைத் தோற்கடிக்கும் உதடுகள், கருநாகக்கூந்தல், உடம்பை சற்றுபிடித்தவாறு போட்டிருந்த வளவளப்பான ஸில்க் ஜாக்கெட், வாயில் புடவையணிந்த (இந்த கோலத்தோடுவிளங்கும்) வனிதை. பார்த்தேன். குனிந்தாள். 'கடாஅக்களிற்றின் கட்பாம் மாதர் படாஅமுலை மேற்றுகில்.' என்ற பொய்யாமொழியின் திவ்யதரிசனம்தான் கண்டேன். தூக்குமேடையில் கண்ட வேணியோயென வெண்ணினேன், சிலையோயென சிந்தித்தேன். என்மனம் இவற்றையெல்லாம் எண்ணியது ஒரே கணத்தில்தான் உடனே பக்கத்திலிருந்த பெஞ்சியில் உட்காருங்கள் என்றேன் நாணத்துடன் உட்கார்ந்தாள்.

'யார், என்ன வேண்டும்?' என்றேன். நாணத்தால் முகம் சிவந்தது. சிங்காரிக்குபிறகுதன் இனிமைக் குரலால் 'நான் ஒரு ஆசிரியை.' இவ்வூருக்கு என்னை நியமித்துள்ளார்கள், எனக்கு........(அவ்வாக்கியத்தை சரியாகக்கூட முடிக்கவில்லை.) என்ன வேண்டும் என்றேன்.

ஒரு அறை வேண்டும்? என்றாள்.

'ஊஹூம்... நான் உன் கன்னத்தில் அறையமாட்டேன்' என்றேன் கிண்டலாக இருவரும் சிறித்து விட்டோம்.

இல்லை. ஒரு ரூம் (Room) வேண்டும் என்றாள். பிறகு எங்கள் வீட்டிலுள்ள ஒரு அறையில் தங்கச்செய்தேன்.

எனக்கு ஆபீஸ் அதிக வேலையிருப்பதால் இரவு எட்டு மணிக்குதான் வீடு திரும்புவேன். ஆதலால் எனக்கு அவளுடன் பேசச் சந்தர்ப்பமில்லை. ஆனால் என் தாயிடமிருந்து அவள் பெயர் சரஸ்வதி யென தெரிந்து கொண்டேன். "கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம் காமத்தின் செம்பாக மன்று பெரிது" என்ற குறளின் படி கண்டுகளிப்பேன்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் என்னுடைய ஆபீஸ் விடுமுறை. நான் எப்படியாவது சரஸாவுடன் பேசவேண்டுமென்று திட்டமிட்டவாறு என்னுடைய அறைக்குச் சென்றேன். பாரதிதாசன் கவிதைகளில் உள்ள "மாந்தோப்பில் கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!!!" என்ற வரிசையைப்படித்து முடித்தேன் 'மன்னிக்க வேண்டும்' என்று ஒரு பழகின குரல் கேட்டது, பார்த்தேன். சரஸா (கலைவாணி) வந்து கொண்டிருந்தாள். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல்' என்ற பழமொழியை நினைத்துக் கொண்டேன். பெயருக்கேற்றவாறு வெள்ளைக் கலையுடுத்தி வந்திருந்தாள் தூய்மை நிறைந்த உள்ளத்தை உடையவள் என்று விளங்கிற்று அவள் உடுத்தியிருந்த உடை. உடனே நாற்காலில் அமரச்செய்தேன். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு 'கேரம்' (Caram) விளையாட ஆரம்பித்தோம். அன்று மத்தியானம் சரஸாவுக்கு என் வீட்டில் விருந்து. இரவு மந்திரிகுமாரி என்ற சினிமாப் பார்க்கப்போனோம் (நானும் சரஸ்வதியும்). படம் முடிந்தது கருணாநிதியின் கதை வசனத்தை புகழ்ந்துகொண்டே வீடுவந்து சேர்ந்தோம்.

எங்களிருவரின் தோழமையும் காதலாகமாறி காட்டுத்தீயைப்போல் வளர்ந்து கொண்டே வந்தது. என் வாலிபப் பருவமும் சரஸ்வதியின் மங்கைப் பருவமும் எங்களை சும்மாவிட்டு வைக்கவில்லை, எங்களிருவரையும் இன்பவெள்ளத்தில் இணைபிரியாது மிதக்கச்செய்தது.

ஆம், பெரியார் பிறந்தநாள் விழ[illegible]ன்னும் ஒரு வாரம்தான் உள்ளது. நாங்களும் இ[illegible]ாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டோம். அன்றே எங்கள் காதல் மணத்தை முடித்துக் கொண்டோம். பெரியார் பிறந்தநாள் விழாவையும் சிறப்பாகக் கொண்டாடினோம்.

★ தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் "பொய்யாமொழி"யின் சந்தாதாரராகச் சேர்ந்து வளர்ச்சியடையச் செய்யுங்கள்.

வீரத் தமிழ் இளைஞன்

ஆ. இராமசாமி

—o—

தூதுவன்: மன்னர் மன்னவா! அனந்தவன்மன் அங்கு போர்! போர்...!! என்று முழங்குகிறான்...! ஆனால், படைவீரர்களுக்கு நடுக்கம்; படைவீரர்கள் அஞ்சுகின்றனர். அங்கு சேனாதிபதியால் வீரம் ஊட்டப்படுகின்றது.

மன்னன்: படை வீரர்கள் அங்கு நம்மைவிட அதிகமா?

தூதுவன்: ஆம் மன்னவா...! அங்கு வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர், நம்நாட்டுவீரர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்... ஆனால் வீரத்தில்உயர்ந்தவர் மன்ன! யானை உருவில் பெரிது: சிங்கம் சிறியது போரிட்டால் எது வெற்றி அடையும்?

மன்னன்: (புன்முறுவலுடன்) சிங்கம்!

தூதுவன்: அதுதான் நம்படை மன்னவா...! (வீரம் தொனிக்க)

அமைச்சர்: தூதுவர் திறமையை பார்த்தீர்களா!

மன்னன்: அன்பழகனை தூதுவராக அனுப்பி வைத்த தங்களையன்றோ முக்கிய காரணமாக கருதவேண்டும் (பூரிப்போடு கூறுதல்)

(ஒரு காவலாளி வந்து வணக்கம் செலுத்தி...!)

காவலாளி: வேந்தர் வேந்த! ஒரு வீரம் பொருந்திய வாலிபர் தங்களை நேரில்காண ஆவல் படுகின்றார்

மன்னன்: வீரம்பொருந்திய இளைஞனா! சென்று வரச்சொல்.

காவலாளி: எப்பொழுது மன்னவா? (தயக்கத்துடன்)

மன்னன்: ஓ! நீ சென்று அவனை வரச்சொல் என்றேன்......(தலைவணங்கி செல்கிறான். செங்குட்டவன் அங்கிருந்து படைவீரர் நடை நடந்து வீர வணக்கம் செலுத்தி பேச ஆரம்பிக்கிறான்)

செங்: பல்திசைவென்ற வெற்றிவேந்த......! வணக்கம் (தலைகுனிந்து வணக்கம் செலுத்துகிறான்)

மன்னன்: வீர இளைஞனே! நீ இங்குவரவேண்டியதின் அவசியமென்ன? (இடையே அமைச்சர் குறுக்கிட்டு)

அமைச்சர்: மன்னவ! முதலில்போர் குறித்து முடிவு செய்தால் நலமாக இருக்கும், யாரை இந்தபோருக்கு தலைவராக அனுப்புவது......

செங்: மன்னர்குல மன்ன! நான் போர்தலைவனாக செல்ல அனுமதி வாங்கவே வந்தேன்.

மன்னன்: (நகைத்தபடி) இளைஞனே! அனந்தவன் மனை எதிர்த்து உன்னால் வெற்றிபெற முடியுமா?

(தொடரும்

கைத்தறி நெசவாளர்களின் துயர நிலை.

வேலைக்குத் தேவையான நூல் 100பொந்து, கிடைப்பது சிற்சில இடங்களில் 20 பொந்தும் பல இடங்களில் இன்னும் குறைவு. மாதம் 1க்கு சராசரி வேலை கிடைப்பது அதிகநாள்கள் ஆறுதான் அந்த ஆறுநாளைக்கு வருவாய் மாதம் 1வரை ரூ 5—4—0 குடும்பம் குறைந்தது 3முதல் 5பேர் இந்த விலை ஏற்ற நாளில் எப்படி வாழ்க்கை நடத்த இயலும்.

மாதாவாரி நூல் விநியோக அட்டவணை. (பேல்கணக்கில்)

மாதம்	உற்பத்தி	தேவை	கிடைப்பது
1950 ஜூன்	39,612	29,000	18,800
,, ஜூலை	46,043	29,000	23,569
,, ஆகஸ்டு	43,417	29 000	18,675

சுமாராய் நம்மாகாணத்தேவை 29000 கிடைத்து வருவதோ ஏன்இந்நிலை எனில் அந்தநூலை பிரிப்பது டில்லி அரசாங்கம். ஆகவே சென்னைமாகாணத்துக்கு அவர்களால் இடப்பட்டபிச்சை இதுமட்டுமா? நமது சென்னைமாகாணத்திலே P, T, C. ஆபீசர் அவர்கள் ஜில்லா வாரியாகபிரிக்கும்போது ஜில்லாவாரியாகவுள்ள கைத்தறிகணக்குபார்த்து நூல் பேல்கள் பிரிக்கப்படாமல் ஜில்லா விகிதம் பிரிப்பதால் கிடைக்கும் சொல்பநூலும், சிலநூல்கள்கீழ் நம்பர் நூல்கள் உயர்ந்தரக நூல்கள் நெசவு செய்யு மிடத்துக்கும் மாறிவிடுவதாலும் சாயந்தோய்க்க வழக்கம்போல் மதுரைக்கு அனுப்பும் சாயம் தோயும் நூல்களில் சாயக்கூலிகள் ஏற்ற குறைவாலும் சரியான விநியோக முறைகளின்றி பாதிக்கப்பட்டும், கண்சைனி வியாபாரிகள் இவர்களிடம் நூல்போகாமல் மில்காரர் களின் டெப்போக்களில்போய் தரிக்காரர்கள் கொஞ்ச நூல்எடுக்க நேரிடுவதால் ஏற்படும் தொல்லையும் சொல்லும் தரமன்று.

கைத்தறி நெசவாளர்களின் துயர அலங்கோல அவதியுறும் நிலைகாண சகியாதவறுமை பிச்சை எடுத்துண்ணும்நிலை ரேஷன் உணவுநிலையோ அதைவிட கொடுமை. எந்தவீட்டிலும் விருந்தினரோடு உண்ண முடியாவிடினும் ஒருகவளம் அன்னம்கூட ஏழை எளியவர்களுக்கு அளிக்க எண்ணமிருப்பினும் செயலில்காட்ட முடியாதநிலை, காணவேண்டும் நேரில் அமைச்சர்கள் இந்த அவலநிலையும் நாற்ற அரிசியும்தவிர சுமார் 2வாரமாய் 3நாள்தான் உணவு அரிசிதவிர மற்றய தானியங்களும் மக்கள் அவதிசொல்லும் தரமன்று ஏழை எளியவர்கள் நடுத்தரவாதிகள் நிலமை சொல்ல நா கூசுகிறது,

விரைவில் வெளிவரும்.

கற்பனைத் தென்றல் அற்புத நடைகள்
விற்பன்னர் புரட்டுகள்
இவைகளை விளக்கி காட்டிடும்

"துரோகி?"

(தொடர் நாடகம்)

கதை வசனம்: கு. ஆண்டியப்பன்
சு. இராமமூர்த்தி

பொய்யாமொழி

கதிர் 1 } 1981, கார்த்திகை 28 புதன். { மணி 16

"விசும்பில் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது"

விசும்பில் துளி வீழின் அல்லால்—முகிலில் இருந்து மழைத்துளி விழுந்தாலன்றி, ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது—அவ்விடத்தே பசும்புல்லின் தலையைக் காண்பது அரிது.

விசும்பு-வானம்; முகிலை யுணர்த்திற்று. தலை-நுனி காண்பு-காண்பது. மற்று-அசை. மழை பெய்யாவிடின் புற்களும் தளிர்க்கா.

கிண்டிரேசும்
மோட்டார் பஸ் பர்மிட்டும்.

திருச்சி ஜில்லாவில் பஸ் பர்மிட் கொடுப்பதானது குதிரைக்கு கொம்பு முளைப்பதுபோல் உள்ளது. நாட்டில் தற்காலம் பல கண்ட்ரோல்களால் ஒவ்வொரு சிறு சிறு காரியங்களுக்கும் தாலூகா தலைமை, ஜில்லா தலைமை, மாகாணத் தலைமை போன்ற நகரங்களுக்கும் அடிக்கடி போகவேண்டியது ஏற்பட்டுள்ளது. தடுக்க முடியாததும் தவிர, சிவில், கிரிமனல் வழக்குகளுக்கும் போகவேண்டிய சூழ்நிலையிலுள்ளது. ஒவ்வொரு கிராமத்தினின்றும் ஜனங்கள் போக்குவரத்துக்கு பஸ் ஏறுவதற்கு தவித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். தவிர, குக்கிராமங்களிலிருந்து வந்து சேரும் ரோடுகளில் பஸ் வசதியின்றி மக்கள் அவஸ்தைப்படுவது சொல்லும் தரமல்ல. குறிப்பாக, உ. தாலூகாவில் மீன்சுருட்டி வழியாக சேத்தியாதோப்பு, சிதம்பரத்திற்கும், உடையார் பாளையமிருந்து உதயநத்தம் வழியாக மாயவரத்திற்கும், ஆத்துக்குரிச்சியிலிருந்து மதனத்தூருக்கும் மற்றும் மற்றைய தாலூகாகளில் ஆங்காங்குள்ளகிராம 3, 4, நெ. ரோடுகளுக்கும் பஸ்வசதி கட்டாயம் மறுக்க முடியாத தேவை.

தற்போது பஸ் பர்மிட் வழங்கும் முறையானது சர்க்காருக்காக ஜனங்களா? ஜனங்களுக்காக சர்க்காரா? என்ற பேதமையுடையதாகவும் போல் பஸ் முதலாளிகளின் சவுகரியத்திற்காக போக்குவரத்து பர்மிட் வழங்குமுறையமைந்திருக்கிறதெனில் எப்படித் தவறாகும். போக்குவரத்து சவுகரியத்திற்காக பஸ்கள் விடப்படுவதென்றால் மக்கள் அதிக போக்குவரத்துள்ளதும் ரயில்வசதி இல்லாததுமான நெ.1. ரோடுகளுக்கு 30 to 40 நிமிஷங்களுக்கு ஒரு பஸ் வீதமும், 2 நெ ரோடுகளுக்கு $1\frac{1}{4}$ to $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு ஒரு பஸ் வீதமும், 3 நெ. ரோடுகளுக்கு 2 to 3 மணி நேரத்திற்கு ஒன்றுவிதமும், 4 நெ. ரோடுகளுக்கு 3 to 4 மணிக்கு ஒன்று வீதமும் ரயில் கனெக்ஷன் உடையதானால் ரயில் போக்குவரத்தையும் அனுசரித்து முன்னுடியே டயமிங்குகளை ஏற்படுத்தி விட்டு அதன்பிறகு பஸ்பர்மிட்டுகளை வழங்கினால் போக்கு வரத்துக்காக ஏற்படுத்திய (For public conveniance) என்ற வார்த்தைக்கு அவமானம் நேராமல் பாதுகாக்க வேண்டியது சம்மந்தப்பட்டவர்கள் பொறுப்பாகும். வண்டிகள் குறைவாக ஓடுவதால் சில லயன்களில் ஏற்பட்டுள்ள ஓவர்லோடு சொல்லும் தரமல்ல, கீழ்உட்கார்ந்தவர்கள் தலையில் நிற்பவர்களின் சாமான் தலையில்படும்படியும் குனிந்து கொண்டு நிற்பவரின் குண்டி சீட்டில் உட்கார்ந்திருப்பவர்கள் முகத்திலும் தேய்ந்து உராயும் மாதிரி பஸ்களில் மூட்டை முடிச்சுகள் அடுக்குவது போலாய்விடுகிறது ஆனால் ஒவ்வொரு பஸ்களுக்கு செக்கிங்குகள் கட்டாயம் உண்டு டிரைவர் கண்டக்டர் திருடாமல் பார்க்க. அந்த நேரத்தில் அந்த முதலாளிகள் பஸ்களுக்காக ஏற்படுத்தியுள்ள ஜனங்கள் விகிதம் பணம் கட்டி விட்டு அதிக ஜனங்களை ஏற்றுவது திருட்டு குற்றத்துக்குட்படுவதில்லை. பெரியவங்க செய்வது பெருமாள் செய்வதுமாதிரி போலும். மேலும், ஜில்லா முதல் மாகாணம் வரை மோட்டார் டிராபிக் சம்பந்தப்பட்ட போர்டிலுள்ளவர்களுக்கு பெரிய நகரங்களில் பிளஷர், டாக்ஸிகள் ஜட்கா வண்டிகள், ஒத்தைமாட்டு வண்டிகள், ரிக்ஷாக்கள், டிராம்கள், மின்சார வண்டிகள் இவ்வளவு வசதியும் ¼மைல் முதல் 2, 6 மைல் வரை போகிறவர்கள் அடிக்கடி ஏறும்படியான வசதி பெற்றுள்ளதும், அதற்கு மேலும் தேவை என எண்ணுவதும்கிராமப் புறங்களிலுள்ளவர்கள் வேகும் வெய்யிலில், மழையில், மூட்டை முடிச்சுகளுடன், குழந்தை குட்டிகளுடன் ஒரு ஊர் விட்டு ஒரு ஊருக்கு 5மைல் முதல் 50, 60 மைல் போக அவஸ்தைப்பட்டு குறிப்பிட்டபடி குறிப்பிட்ட ஊருக்கு போய்ச்சேரமுடியாத நிலை

...சேர முடியாமல், ரேஷனில் உணவு கிடைக்காத நிலையில், ஊர் ஊர் புறப்பட்டால் போய்ச் சேரமுடியாத நிலையில் அவஸ்தைப்படுவதும், ஊருக்கு புறப்பட்டுபோவதும் திரும்பி பஸ்கிடைக்காமல் வருவதும் எவ்வளவு நெருங்கிய உறவினரையும் ரேஷன்தொல்லை போனால்போதுமென்று கருதுவதும் பஸ் பிரயாணத்திற்கு சென்றவுடன் அந்த பஸ் எவ்வளவு தூரம் போகிறதோ அந்த ஊருக்குத்தான் முதல் டிக்கட் கொடுப்பதும் மற்றைய சமீப ஊர்களுக்கு டிக்கட் கிடைக்காமல் போவதும், இதுகளுக்கு டிக்கட் வாங்க ஆண், பெண் நிலை மாறி விழுந்து மேலே உராய்ந்தும் இடித்தும் சிலர் டிக்கட் எடுக்க கைவிடும் துவாரத்தில் ஒரு கைகொள்ளுமிடத்தில் 7, 8 கைகளை நுழைத்துக்கொண்டு கை ரத்தக்காயம் ஏற்படுவதும், சிற்சில இடங்களில் பஸ்ஸைக் கண்டவுடன் படைஎடுப்புமாதிரி விழுந்துஓடி கம்பியை பிடித்துக்கொண்டுதொங்குவதும் மிகுந்த கேவல நிலைக்குப் போய்விட்டது பஸ் முதலாளிகளின் புலம்பலால்.

உணவுக்குத்தான் சிற்சில இடங்களில் மழையின் மையும், சில இடங்களில் வெள்ளப்பாழும், சில இடங்களில் பூகம்பமும் ஏற்பட்டு விளைவு பாதிக்கப்பட்டதென்றும் கல்லும் நெல்லும் நாற்ற அரிசியும், நாள் 1க்கு 1 அவுன்ஸ் கிடைக்கிறதென்றால் மோட்டார்பஸ்களுக்கு என்ன பஞ்சம்? புதிய மோட்டார் பஸ்கள் கிடைக்கவில்லையா? அதுதான் கிண்டி ரேசில் குதிரைக்கு பணம் கட்டி எதிர்பார்ப்பதுபோல் ஆனால் அதற்கு 100, 150 பீஸ் கொடுத்து வக்கீல்கள் தேவையில்லை. இதற்கு 100, 150 200 பீஸ் வாங்கிக்கொண்டு வக்கீல்களும் ஏராளமானவர்களுண்டு. மீட்டிங் நடக்குமிடங்களிலும் மோட்டார் முதலாளிகளும் அவர்களின் ஸ்டெப்னி போன்ற ஆதரவாளர்களும் ஏராளமாயுண்டு. குதிரை ஜெயிப்பதுபோல் எதிர்பார்ப்பதும் ஜெயித்த குதிரையாளர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்வதும் மற்றையவர்கள் உடனே சென்னைக்குசெல்லும் ஏரோப்ளானுக்கு உடனே அதற்கு எத்தனை இடமுண்டோ அத்தனைடிக்கட்டுகளும் வாங்கிக்கொண்டு அப்பீல் செய்ய புறப்பட்டு போய்ப் பார்க்க வேண்டியதைப் பார்த்து. செய்யவேண்டியதை செய்து அதை மாற்றுவதும், ஸ்டே செய்வதும் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றனவே இது காணும்பொழுது இந்த மாகாண பஸ்கள்பூராவும் சுமார் 161 பேர்களுக்குள் மாட்டிக்கொண்டு விழிக்கிறது ஜனங்கள் போக்குவரத்து வசதியில்லாமல் சர்க்காரை சபிக்கிறார்கள், நாசமாய்ப் போன சர்க்கார் இன்னும் வேண்டிய பஸ்களை விட்டால் என்ன கேடு என்று அவர்கள் குழந்தை குட்டிகளுடன் மூட்டைமுடிச்சுகளை தூக்கிக் கொண்டுபோய் பஸ்கிடைக்காமலும், தாங்கள்செல்லவேண்டிய இடங்களுக்கு செல்ல முடியாமலும் திரும்பி வரும்போது ஏன் சபிக்கமாட்டார்கள்? ஜில்லா, மாகாண டிராபிக் போர்டார்களும், கனம். போக்குவரத்துக்குரிய மந்திரிகளும் ஏன் இந்த சாபத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்? எல்லோருடைய நாவும் ஒரே மாதிரி இருக்குமா? ஒரு சிலரின் நாவினால் கூறும் சொல் பலித்து பல இன்னல்களை உண்டாக்கிவிடும். ஆனால் அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! அவர்களைச்சுற்றிலுமுள்ள சூழ்நிலை மதுவருந்திய வண்டுகள்போல், ஏன் தேனில் விழுந்த தேனீக்கள் போன்ற நிலையிலேயே இருப்பதாலும், உலகப் பொது மக்கள் நிலையையறிய வாய்ப்பு ஏற்படவில்லையாதலாலும் கொஞ்சம் கண்திறந்து கருத்தைமாற்றி எந்த ஊருக்காவது பயணம்போகப்புறப்பட்டு தங்களை இன்னாரென்று அறியமுடியாமலோ தாங்கள் போகமுடியாது. முடியாவிடினும் C.I.D.க்களையாவது சென்று பார்த்து ஒவ்வொரு பஸ்ரூட்டுகளிலும்போக்குவரத்துக்கு ஜனங்கள் எவ்வாறு அவதியுறுகிறார்கள், எப்படி படையெடுக்கிறார்கள் என்பதை ரிபோர்ட் செய்யும்படியாவது செய்து உண்மை புரிந்து கொண்டீர்களானால் நலமாகும். சாபத்தினின்றும் தப்பலாம். மேலும் பஸ் பர்மிட் கொடுக்கும் முறையில் பஸ் இருப்பவர்களுக்கு கொடுப்பது ஷெயார்களிடம் ஒர்க்ஷாப்பு வசதிகளுண்டு என்பதனாலென்றால் பஸ் நிற்காமல் ஓடும் என்ற எண்ணமானால் உடனுக்குடன் பஸ் இருந்தாலும் ஒரு பஸ் ரிப்பேராய் போய்விட்டால் கூட பின்னால் வரக்கூடிய பஸ்கள் அந்தஜனங்களை ஏற்றி சென்று விடாதா? பஸ்கள் அதிகமானால் மோட்டார்த் தொழிலாளிகளின் வேலையில்லாத திண்டாட்டமும் குறையுமே. தவிர, எத்தனை முதலாளிகள் நல்ல முறையில் லயனில் நிற்காமல் ஓடும்படியும் புதிய பஸ்கள் வைத்தும் போதுமானால் ஒர்க் ஷாப்புகள் அதற்குரிய ஆள்கள் வைத்து நடத்துகிறார்கள்,

அதற்காவது, இத்தனை ஆள்கள் இருக்கவேணுமென்று கட்டாயமுண்டா? பஸ்ஸில் நீண்ட தூரம் ஓடும் கண்டக்டர் டிரைவர்கள் அன்றுடம்ஓடும்படி விடப்பட்டிருக்கிறார்களேயன்றி வேலையற்றுதவிக்கும் டிரைவர் கண்டக்டர்கள் பலரிருக்க ஒவ்வொரு பஸ்ஸுக்கும் 2பேர் விதம் ஆட்கள் வைக்கும் கட்டாயம் உண்டா? புதிய பஸ்களுக்குத்தான் பர்மிட் கொடுப்பதென்று வைத்தால் பஸ் வாங்கிவிடமாட்டார்களா? அவர்கள் பிரேக்சர்ட்டிபிகேட் போன்று வண்டி லயனில் இருக்கும் நாட்களுக்கு அவர்களில் 5 பேர்களுக்கு அல்லது மூவர் சேர்ந்து ஒரு ஸ்பேர் பஸ் வைப்பதென்றால் வைத்து ஓட்டமாட்டார்களா? அன்றியும் பஸ்பர்மிட் வழங்குவதில் உரிமை அளிப்பது ஒருவாறு பொருத்தம் தேவை என்று கருதினால் 1939க்கு முன் பஸ் வைத்து நஷ்டமடைந்தவர்களுக்குமாவது, மதுவிலக்கு போன்றவைகளால் வேலையிழந்த ஆப்காரி கண்ட்ராக்டர்களுக்காவது அல்லது பஸ் தொழிலாளர்களாகிய டிரைவர்கள், மெக்கானிக்குகள் போன்றவர்களுக்காவது அளித்தால் நியாயமாகுமேயொழிய ஏனைய மற்ற விதிகள் நீதி நியாயத்திற்கு பொருத்தமற்றதுடன் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்து வாடகை பஸ்கள் என்பது பொருந்தாது. பஸ்களுக்காக பிரயாணிகள் இருக்கிறார்கள் என்று ஆகுமே தவிர, ஜனங்கள் போக்குவரத்துக்கு சவுகரிமாய் பஸ் வைத்ததாக ஆகாது தவிரவும், ஒருபக்கம் வனமகோத்சவம் வைத்து மரம்வளர்ப்பதும், மற்றொருபுறம் பச்சை

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

தலையங்கம் 5ம் பக்கம் தொடர்ச்சி

மரங்களை வெட்டி கரிசுட்டு மரங்களை ஒழிப்பதும் என்ன பிரயோசனம்? பெட்ரோல் கிடைக்கும் நிலையிலும் இன்னும் ஏன் கரி பஸ்களிருக்க வேண்டும்? ஆகவே, கரி பஸ்களை குறைத்து பெட்ரோல் பஸ்களாகமாற்றி ஓட்டுபவர்களுக்கும், ஓடுபவர்களுக்கும், பொது மக்களுக்கும் சவுகரியம் உண்டாக்கும்படி கிண்டிரேஸ் மாதிரி பர்மிட் லக்கி பார்க்காமல் பர்மிட் கொடுக்க கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அறிவிப்பு.

திருச்சி ஜில்லா கலெக்டர் ஒரு வருஷ லீவுடன் ரிட்டேடாவதாக தெரிகிறது. ஷை விஷயமாக சிலர் டாக்டர் ராஜன் அவர்கள் சொந்தமான திருவேங்கிமலை பண்ணையில் நெல் ஸ்டாக் இருந்ததாகவும் அதை கலெக்டர் கொள்முதல் செய்ததாகவும் அதற்காக கலெக்டரை மாற்றப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். இது ஆதாரமில்லாத வீண்பிரசாரம் என்பதை நண்பர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

— அ. இ. காதர்கான்.

உ. தா. விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட நிதி வசூல்.

திருவாளர்கள்,	ரூ. அ. ப.
D நரஸிம்மய்யர் வக்கீல், ஜெயங்கொண்டம்.	25—0—0
ஆதிமூல படையாட்சி காங்குழி	10—0—0
R. குருமூர்த்தி ஐயர் கர்ணம் திருக்களப்பூர்	10—0—0
R. ரெத்தினம் ஜெயங்கொண்டம்	6—0—0
முன் வார வசூல்	580—0—0
ஆக மொத்தம்	631—0—0

நிதி அனுப்ப வேண்டிய விலாசம்:
காரியதரிசி
விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட கமிட்டி
அம்பாபூர், குணமங்கலம் P. O.

உணவுபஞ்சம்.

சென்ற இருவாரங்களாய் ஜெயங்கொண்டம் கிராமவாசிகளுக்கும் ஏனைய சுற்றுப்புர கிராம ரேஷன் கடைகளுக்குமாக ஜெயங்கொண்டத்தில் வாரம் 1-க்கு சிலருக்கு மூன்று 4 நாளும், மற்றய கிராமங்களில் 1 நாளைக்கும் ரேஷனில் உணவுகொடுத்து வரப்படுகிறது வேறு கலப்புணவு பொருள்களும் கிடையாது. கலெக்டர் ஜில்லா சப்ளை ஆபீசர் அவர்களும் சம்பந்தப்பட்ட மற்றைய அதிகாரிகளும் உடனே கவனித்து ஏழைகளை பட்டினியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

கோர்ட்டு பீஸ்லேபிள், மனுலேபிள், காப்பி ஸ்டாம்புகளுந்த பஞ்சம்!

ஜெயங்கொண்டம் ஒருமெயின் தாலூகா செண்ட்டர் ஸ்டேஷனரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுமுண்டு. இதற்கு இத்தாலுக்காவில் 4 பிர்க்காக்களுக்கும் நடவடிக்கைகள் பூருவும் நடக்குமிடம் சென்ற 1 வருஷமாய் தாலுக்கா சப்மே-கோர்ட்டுக்குயென இருந்த ஸ்டாம்பு வெண்டர் கிடையாது. அதிலும் குறிப்பாக 3 வாரகாலமாய் சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் ஸ்டாம்பு வெண்டரும் இல்லை. தபாலாபீசிலோ ... லை ... வேளைகளில்தான் ஏதோ சில ஸ்டாம்புகள் கிடைக்கிற

கோர்ட்டுகளில் நடவடிக்கைகளுக்குரிய காப்பீ ஸ்டாம்புகள் மனு லேபிள்கள். கோர்ட்டுபீஸ் லேபிள்கள் கிடைக்காமல் மக்கள் திண்டாடுகிறார்கள். மேலும் கோர்ட்டுபீஸ் லேபிள். மனுலேபிள்களுக்கு ரூ, 1-0-0க்கு 1¼ பைசா விதம் கமிஷன் கிடைப்பதாலும் தஸ்தாவேஜுகளுக்குரிய ஸ்டாம்புகளுக்கு ரூ. 1—0—0க்கு 9 பைசாவானதினாலும் தஸ்தாவேஜுகள், ஸ்டாம்புகள் கிடைக்கும் அளவு ஷை ஸ்டாம்புகள் கிடைக்காமலிருக்கிறது. மக்களுக்கு நன்மை வழங்கும்முறையில் மற்றொரு அடிஷனல் ஸ்டாம்பு வெண்டர் சப்ரிஜிஸ்டர் ஆபீசுக்கும் சப்மே-கோர்ட்டுக்குமாக இணைத்துப்போட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து யாரையாவது ஸ்டாம்பு வெண்டராக நியமித்து மக்கள் குறைபாடுகளை நீக்க ஆவனச்செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

வன்னியர் கல்வி வளர்ச்சிக் கழக மாநாடு.

17—12—50 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உ, தா. தாதம்பேட்டை பழூர் கிராமத்தில் நடைபெறும்.

தலைவர்:—

திரு, கே. ஆர். விசுவநாதம் எம். ஏ. அவர்கள்.

சொற்பொழிவாளர்கள்:—

(1) "வன்னியர் நிலை"
திரு. திருகுறள் V முனிசாமி B A, B. L, அவர்கள்,
("குறள் மலர்" ஆசிரியர் கடலூர்)

(2) "முன்னேற்ற வழிகள்"
கிடங்கல், திரு. K. R சம்பந்தம் B. A., அவர்கள்
(தஞ்சை மாநாட்டாண்மை கழக உறுப்பினர்)

(3) "படிப்பது ஏன்?"
திரு. ம. து. நடராசக்கண்டர் அவர்கள்.
(நிலகிழவர், செஞ்சி)

(4) "நமது பெரியார்கள்"
வித்துவான், திரு. ம. கு. பெரியசாமி அவர்கள்,
(தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி உடையார்பாளையம்)

அனைவரும் வந்து சிறப்பிக்க வெண்டுகிறோம்

இங்ஙனம்,
மாநாட்டு வரவேற்புக் குழுவினர்.

செயங்கொண்டம்

திராவிட முன்னேற்றக் கழக முதலாவது ஆண்டு விழாவும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்க விழாவும். நடைபெறும்

17-12-50; இடம்: காந்தி பூங்கா; காலம்: மாலை 5 மணி

தலைவர்: குத்தாலம், N. C. பன்னீர்செல்வம்

அவ்வமயம், E. V. K. சம்பத், A. K. வேலன்,
சொற்பொழிவாற்றுவார்கள்.

—:—

தமிழ் திருநாள்

வரும் பொங்கலன்று 14—1—50ல் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் தமிழ்த் திருநாள் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய விழா குழு ஒன்று 6—12—50ல் நடந்த பொதுமக்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

விரிவான நிகழ்ச்சியும் பிறவும் பின்னர் தெரிவிக்கப்படும்.

விழாக் கமிட்டியார்.

செய்திகள்.

கள்ள மார்க்கட்
வெல்ல. வியாபாரிகள் பிடிபட்டனர்.

ஜெயங்கொண்டம், டிசம் 10

இன்று இரவு இரண்டு மணிக்கு ராயம்புரம் ஆனந்தவாடி வெல்ல வியாபாரிகள் 11 வண்டியில் 13 டன் வெல்லம், நாட்டுச்சர்க்கரை இவைகளை விற்பதற்கு கொண்டுவரும்போது, ஜெயங்கொண்டம் தாசில்தார் ஜனப், ஷேக்தாவுத் பி ஏ. அவர்கள் ஸ்தல ரெவினியூ இன்ஸ்பெக்டர், பிர்க்கா சப்ளை ஆபீஸருடன் ஜெயங்கொண்டம், அரியலூர் ரோடில் மறித்து மறுஉத்தரவு வரையில் ஷை வெல்லம், சர்க்கரை இவைகளை விநியோகிக்கக்கூடாது என உத்திரவிட்டு திருச்சி கலெக்டர் அவர்களுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

பிரயாணிகளுக்கு பஸ் கஷ்டம்.

திருச்சி ஆர். டி. ஓ. அவர்கள் ஜெயங்கொண்டத்துக்கு 12—12—50ல் சுமார் 1 மணிக்கு வந்து 2-45 மணியிலிருந்து ஜெயங்கொண்டமிருந்து கும்பகோணம் பஸ்ஸில் இடமிருந்து ஏறிய 17 பேர்களும்போக மீதிசுமார் 20 பேர்கள்வரை டிக்கட் கிடைக்காமல் போகமுடியவில்லை ஷை. பிரயாணிகள் 2 தினமாகக் காத்திருப்பதாய் சொன்னார்கள். நேரில் உண்மையைக் கண்டுபோய் ஆகவேண்டியதை சொல்லிச் சென்றார். நாமும் அதிகபஸ் பர்மிட் வழங்க ஏற்பாடுகள் செய்வாரென எண்ணுகிறோம்.

ஃ ஃ ஃ

நூல் விநியோகம்

சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலை தில்லி மத்திய சர்க்கார் நூல் பிரிக்கும் பொறுப்பு அவர்களிடமிருப்பதால் அவர்கள் நம் மாகாணத்து தேவைக்கு 3-ல் 1 பங்குதான் கொடுத்து வருகிறார்கள் என்பதோடு சென்னை மாகாணத்தின் அனுமதியன்னியிலேயே எடுத்துக்கொள்ளும் அதிகாரம் தங்களுக்கு இருப்பதால் சென்ற ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் 400 ராத்தல் கொண்ட 17000 பேல்களை எடுத்துக்கொண்டார்கள். மேலும் நமக்காக ஒதுக்கும் கொஞ்சநூலையும் நமது சென்னை மாகாண (பி. டி. ஸி.) பிரொவின்ஷியல் டெக்ஸ்டையல் கன்ட்ரோல் அதிகாரி அவர்கள் ஜில்லாக்களிலுள்ள தறிக்கணக்கின்படி விகிதாசாரம் பிரிக்காமல் ஜில்லா விகிதம் பிரிப்பதால் வேண்டிய நெ. நூல்கள் வேண்டியஇடங்களுக்கு செல்லாமல் கைத்தறிநெசவாளர்களுக்கு சங்கடமும் பிச்சை எடுக்கும் பட்டினிப் பட்டாளமும் ஏற்பட வாய்ப்பாகிறது.

ஃ ஃ ஃ

ஏழு தோழர்கள் சிறைவாசம்

திருச்சி ஜில்லா, பெரம்பலூர் தாலூகா, நாராயணமங்கலத்தில் பேச்சுரிமை நிலைநாட்ட 144 தடையுத்தரவை மீறப்பட்டவழக்கில் 143x188 செக்ஷன்களின் மீது அரியலூர் சப்மே கோர்ட்டில் 7—12—50ல் திருச்சி மாவட்ட கழக உறுப்பினர்: வானமாமலை, (1) நாராயணமங்கலம் கழகச் செயளாளர் செண்பகராசன், (2) ஷையூர் பொருளாளர்: வி. எம். விஜயகோடால், (3) ஷையூர் விளம்பர உறுப்பினர்: ஆர். ஆதிமூலம் (4) மூங்கில்பாடி கழக அங்கத்தினர்: எம். வடிவேலு, (5) செண்பகராசபுரம் கழக அங்கத்தினர்: மருதமுத்து, (6) லெப்பைக்குடிக்காடு, கழக அங்கத்தினர்; அமராவதி. (7) ஆகிய ஏழு தோழர்களையும் 3 மாதம் சிறைவாசமளித்தார்கள். தோழர்கள் புன்சிரிப்புடன் ஏற்று சிறைசென்றனர். ஏராளமான உள்ளூர், வெளியூர் தோழர்களும் பார்த்து வாழ்த்தியனுப்பினார்கள் என்பது குறிப்பிடற்பாலது.

ஃ ஃ ஃ

பஸ் சர்வீஸ் பஞ்சம்.

ஜெயங்கொண்டம், லோயர் அணைக்கட்டு & செந்துரை, சிதம்பரம் ரோடுகளில் மோட்டார் டிராபிக் போர்டுக்கு வேண்டுகோள்.

—o—

மேற்கண்ட ரோடுகளில் பிளஷர்கார் சொந்தமாய் வைத்துள்ளவர்களோ, சொந்த மாட்டுவண்டி வசதிகளோ இல்லாத பஸ்ஸில் பிரயாணம் செய்யலாமென எண்ணி அக்கம் பக்கக் கிராமங்களிலிருந்து பஸ்ஸுக்காக ரோடுகளில் காத்திருக்கும் பிரயாணிகளின் நிலைமை பரிதாபம். சிறு சிறு மூட்டை முடுச்சு குழந்தை குட்டிகளுடன் வேகாத வெய்யிலில் பஸ் பிரயாணத்தை நம்பி வந்துவிட்டவர்கள் காலைமுதல் இரவுவரை ரோட்டில் காத்திருந்து திரும்ப புறப்பட்ட இடத்திற்கே போகும் நிலை ஏற்பட்டிருப்பதை ஜனங்கள் சவுகரியத்துக்காகவே விடப்பட்டுள்ள பஸ்களுக்கு, உணவுப் பஞ்சம்போல் என்ன பஞ்சம் வந்துவிட்டது ?

இந்த பஞ்சத்தையாவது சம்பந்தப்பட்ட டிராபிக் கண்ட்ரோல் போர்டார்கள் மனதை பெரிதாக்கி தாராளப்படுத்தக்கூடாதா ? எங்கள் வேண்டுகோளுக்கிணங்கியாவது உடனே ஆவன செய்வீர்களென்று சம்பந்தப்பட்ட C R T B கனம். மந்திரி கோபால் ரெட்டியார் இவர்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

மு. சு. அரசன்.

ஃ ஃ ஃ

குறைபாடுகள்.

உ தா. ஆயிரக்கலவன் கிராமவாசிகளாகிய எங்கள் ஊரில் ஒரு ஆயக்கட்டு பெரியஏரி உண்டு. அது 10. 12 வருஷகாலமாய் பாசலமின்றி ஏரி சீர்கேடடைந்துவிட்டது. ஆனால் அதினின்று எங்களுக்கு ஏற்பட்ட நஞ்சைத் தீர்வைமட்டும் வசூல் செய்துவரப்படுகிறது. தவிர பொன்னேரி 4 வாய்க்காலில் எங்களூர் நிலங்களில் சுமார் 70 ஏக்கர்வரை எடுத்துள்ளார்கள். ஷை ஏரிவீணே போய்விட்டபடியால் அதற்குரிய 30 ஏக்கர் நிலத்தையும ஷை 4ம் வாய்க்காலில் பாசனத்தில் சேர்த்துக் கொண்டால் உணவுப்பஞ்சமும் தீரும். எங்களுக்கு ஏற்படுகிற நஷ்டமும் ஏற்படாது. இதை பலமுறை திருச்சி ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும் இஞ்சினியர் அவர்களுக்கும் மனுவும் எழுதியுள்ளோம். —ஜி. ராகவன்.

திருச்சி மாநாடுகள்.

V. M. H. பாட்சா.

—o—

வடநாட்டுச் சுரண்டல் மாநாடு—வகுப்புவாரி உரிமை மாநாடு இவ்விரு மாநாடுகளும் திருச்சியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. எத்திசை நோக்கினும் மக்கள் கூட்டம் நிறைந்தும், வீரம் செறிந்த இளைஞர்கள், வீராங்கனைகள், எதிர்கால திராவிடத்தைக்காக்கும் சிறுர்கள் ஆர்வத்துடன்கூடி பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு என்ற வண்ணம் தமிழர்களையும், தமிழ்நாட்டையும் அலட்சியமும், அவமதிப்பும் செய்து வந்த கூட்டத்தார்க்கு எச்சரிக்கை செய்து எங்கள் வாழ்வும் வளமும் வளமார் திராவிடத்தைக் காப்பாற்ற அர்ப்பணிக்கிறோம்! என்னவிலை கொடுத்தேனும் திராவிடத்தைக் காக்கத் தயங்கமாட்டோம்!—என்று வீர முழக்கம் புரிந்த வண்ணம் இருந்தனர். பெரும் பான்மையான ஆண்களும், பெண்களும் கருப்புடை அணிந்திருந்த காட்சி திராவிடத்தின் இழிவைப்போக்க களத்திலே இறங்கி விட்டோம் என்ற போர்முரசு கொட்டுவதுபோல் இருந்தது—தாய்மார்கள் தங்கள் பச்சிளங்குழந்தைகளை சுமந்தும் கையில்பிடித்து கொண்டும் குடும்பம் குடும்பமாய் வந்திருந்த காட்சி எங்கள் தாய்நாட்டைக்காக்க கணவர்களை மட்டுமல்ல—அன்புக்கினிய குழந்தைகளையும் தியாகம் செய்ய தயங்கோம்—அவசியமானல் நாங்களும் போர்களம் இறங்க இருக்கிறோம் என்று கூறுவதுபோல் இருந்தது

திருச்சி கோட்டை வாசலிலிருந்து சுமார் ஒருலெட்சம் பேர்கள் புடைசூழ மேளவாத்தியங்கள் முழங்க திராவிடத்தின் இணையற்ற வீரர் தன்மானச்செம்மல் தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் அறிஞர் M. இரத்தினசாமி M. A. (Can) Bar-at-Law, C. I. E. அவர்களும் வகுப்புரிமைத் தந்தை திரு. S. முத்தைய்யா B A., B L, C. I. E. அவர்களும் அலங்கரிக்கப்பட்ட காரில் பவனிவந்த காட்சி தமிழ்நாட்டு மூவேந்தர்கள் வடவரை வென்று வாகைமாலை சூடிவருவதுபோல் இருந்தது.

மாநாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த பந்தல் சுமார் ஒரு லட்சம் பேர்கள் உட்காரக்கூடியதாகவும், டாக்டர் நாயர் அவர்களின் திருவுருவம் பந்தலின் முகப்பிலே அமைந்தும் நாயர் அவர்களின் உழைப்பு விழலுக்கிறைத்த நீராகவில்லை, தமிழர்கள் நன்றிகெட்டவர்களல்ல என்பதை நிரூவிப்பதைப்போல் இருந்தது.

மாநாட்டு தொண்டர்கள் வந்தவர்களை வரவேற்று உபசரித்து வேண்டியவற்றை வேண்டியகாலத்தில் உதவி புரிந்து முகமலர அகம்மலர தொண்டுபுரிந்தனர். மாநாட்டிற்குவந்திருந்த மக்களோ ஏதோ யாருக்காகவோ யாராலோ கூட்டப்பட்ட மாநாடுகள் என்று கருதாமல் தங்களாலேயே தங்களுக்காகவே கூட்டப்பட்ட மாநாடுகள் என்ற பொறுப்புணர்ச்சியோடு பணிபுரிந்தனர். உதாரணமாக மாநாட்டில் காணமல் போன ¾ பவுன் மோதிரத்தை கொண்டுவந்து கொடுத்து உரிமையாளரிடம் சேர்ப்பித்தார்களென்றல் வேறென்ன தேவை இரண்டு நாட்களும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அருமையான அறுசுவை உண்டி வழங்கப்பட்டது.

இரண்டு நாட்கள் மாநாடுகளிலும் தமிழ் நாட்டு சிறந்த அறிஞர்களான தந்தை பெரியார் ஈ. வே. ரா. திரு. M. இரத்தினசாமி M. A. (Can) Bar-at-Law திரு. S. முத்தைய்யா B.A, B.L. டாக்டர் A. கிருஷ்ணசாமி M. A. Bar-at-Law. அமீத்கான் M. L. A. நாரண துரைக்கண்ணன், பெங்களூர் தர்மலிங்கம் B.A. (Hon) S. குருசாமி B. A. A. P. ஜெனர்த்தனம் M. A. நாகர்கோயில் கிருஷ்ணன் B, A. B.L. T. P, வேதாசலம் B.A, B.L, திருக்குறள் முனிசாமி B.A, B,L. குஞ்சிதம் குருசாமி B.A. L.T, இந்திராணி பாலசுப்பிரமணியம் குடந்தை கிருஷ்ண நாயகி ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த சுமார் ஐம்பதினாயிரம் பேர்களுக்கு மேற்பட்ட மாநாடுகள் நடைபெற்ற பின்பும் காருண்யமுள்ள காங்கிரஸ் சர்க்காரும் கனம் மந்திரிமார்கள் அவர்களும் கேளாகாதினர்களாய் இருந்தும் கண்மூடித்தனமாகவும் அலட்சியப்படுத்தினர்களானல் திராவிடத்தின் எதிர்காலம் திராவிடத்தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் மாநாட்டில் குறிப்பிட்டதுபோல் (ஓர் நவகாளி நிகழினும் நிகழலாம்) அப்படி நிகழ்ந்தால் அதற்கு காரணம் பொறுப்பும் இந்த மந்திரி மார்களும் சர்க்காருமேயாகும் இந்நாட்டின் ஓர் குடி மகன் என்ற முறையிலே காருண்யமுள்ள காங்கிரஸ் சர்க்காருக்கும், மந்திரி மார்களுக்கும் கூறுவது என்னவென்றல் திராவிடத்தின் ஏகோபித்த ஒலியாகிய வகுப்புவாரி உரிமையை உடனடியாக வழங்குவதுடன் வடநாட்டு சுரண்டலையும் உடனே தடுக்கவேண்டும் அப்படி செய்யத்தவறினர்களானல் இன்னாட்டிற்கு ஒரு பெரும் கேடையும், துரோகத்தையும் செய்பவர்களாவார்கள் என்பது உறுதி.

தயாராகிறது!

தைப் பொங்கல் நாளில் பொய்யாமொழி தரும்

"பொங்கல் மலர்"

● மலருக்கு கதை, கட்டுரை அனுப்பும் அன்பர்கள் 30-12-50 வுக்குள் அனுப்பி வைக்கவும்.

* ஏஜண்டுகள் தேவையுள்ள பிரதிகளுக்கு முன்பே அறிவிக்கும்படி கோருகிறோம்.

விளம்பர விகிதம்.

—:—

வெளி அட்டை.		உள் அட்டை.	
முழுபக்கம்	ரூபா. 40/-	முழுபக்கம்	ரூபா. 30/-
½ பக்கம்	ரூபா. 25/-	½ பக்கம்	ரூபா. 20/-

சாதாரண உள்	முழுபக்கம்	ரூபா. 25/-
	½ பக்கம்	ரூபா. 15/-
	¼ பக்கம்	ரூபா. 10/-

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Katcheri Street, Jayankondacholapuram.